விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 11.40 a.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 11.58 a.m.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

## Case No : CC. 350/2023

**Prosecution witness : எ.ம.சா. 2** **Date : 10.10.2024**

| | |
|---|---|
| **Name : சாந்தி** | **Taluk : மேட்டூர்** |
| **Husband Name : முத்துசாமி** | **Calling : கிளைமேலாளர்** |
| **Village : பொட்டனேரி** | **Age : 54** |

( Complainant and Accused Present. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கொளத்தூர் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்கிறேன். வாதி மகேந்திரன் எங்களது வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அதன் கணக்கு எண்.711386098. 01.01.2021ம் தேதி முதல் 30.09.2024ம் தேதி வரையிலான வாதியின் வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்கிறேன். **வங்கி கணக்கு பட்டியல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

10.02.2022ம் தேதி எவ்வளவு தொகை வாதியின் கணக்கில் எவ்வளவு தொகை இருப்பு இருந்தது என்றால் ரூ.22,863/– தொகை இருந்தது. 23.05.2022ம் தேதி எவ்வளவு தொகை வாதியின் கணக்கில் எவ்வளவு தொகை இருப்பு இருந்தது என்றால் ரூ.43,290/– தொகை இருந்தது. மேற்கண்ட வங்கி பட்டியலில் அதிகமான வரவு வாடகை என கோரி ரூ.19,000/– ம் தான் வரவு

வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாடகை எங்கள் வங்கியிலிருந்து தான் வரவு வைக்கப்பட்டது. வாதிக்கு சொந்தமான கட்டிடத்தில் தான் வங்கி இயங்கி வருகிறது. மேற்கண்ட வாடகை பணம் அதிகப்படியாக அன்னம் அக்ரோ சர்வீஸ் வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அன்னம் அக்ரோ சர்வீஸ் மாதேஸ்வரன் என்பவருக்கு சொந்தமானது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதியின் அண்ணன் மாதேஷ் அவருக்கு சொந்தமானது தான் என்று என்னிடம் சொன்னார்.

**குறுக்கு விசாரணை**

09.08.2024 முதல் நான் கொளத்தூர் வங்கி கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இன்று வரை 2 மாதங்களாகிறது. வாதி மகேந்திரன் கட்டிடத்தில் எங்கள் வங்கி வாடகைக்கு இயங்கி வருகிறது என்றால் சரிதான். சுமார் 20 வருடங்களாக இயங்கி வருகிறதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாடகை ஒப்பந்த பத்திரம் மகேந்திரனிடம் மேற்கொண்டுள்ளோமா என்றால் மகேந்திரனிடம் தான் வாடகை ஒப்பந்த பத்திரம் மேற்கொண்டுள்ளோம். அவருக்கு தான் வாடகை செலுத்தி வருகிறோம். எ.ம.சா.ஆ.1 ஆவணம் வாதி வங்கியின் வரவு செலவு பட்டியல் என்றால் சரிதான். 30.11.2022ம் தேதியில் வாதியின் கணக்கில் ரூ.7,70,649/- இருப்பு உள்ளது என்றால் சரிதான்.

கட்டிடம் மாதேஷ் என்பவருக்கு தான் சொந்தமானது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் வங்கி கட்டிடம் மகேந்திரனுக்கு தான் சொந்தமானது. மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**

விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 12.00 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 12.08 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC. 350/2023**

**Prosecution witness : எ.ம.சா. 3** **Date : 10.10.2024**

| | |
|---|---|
| **Name : கார்த்திகேயன்** | **Taluk : ஈரோடு** |
| **Father Name : பன்னீர்செல்வம்** | **Calling : கிளை மேலாளர்** |
| **Village : ஈரோடு** | **Age : 31** |

( Complainant and Accused Present. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது இந்தியன் வங்கி கொளத்தூர் கிளையில் கிளை உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்கிறேன். வாதி மகேந்திரன் எங்களது வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அதன் கணக்கு எண்.555777326. 31.03.2022ம் தேதி முதல் 09.09.2024ம் தேதி வரையிலான வாதியின் வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்கிறேன். **வங்கி கணக்கு பட்டியல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அதிகபட்சமாக மேற்கண்ட வங்கி பரிவர்தனையில் எவ்வளவு இருப்பு தொகை இருந்தது என்றால் ரூ.5,46,639/- எந்த தேதியில் இருந்தது என்றால் 03.10.2023ம் தேதி இருந்தது. 10.02.2022ல் எவ்வளவு தொகை இருப்பில் இருந்தது என்றால் நான் அந்த தேதிக்கான வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்யவில்லை.

23.05.2022ம் தேதி எவ்வளவு இருப்பு இருந்தது என்றால் ரூ.37,043/- தொகை இருந்தது.

**குறுக்கு விசாரணை**

வாதிக்கு சேமிப்பு வங்கி கணக்கு என்றால் சரிதான்.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**